முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 63/2022

நாள். 14.11.2024 வா.சா.2 – திரு. முகம்மது இப்ராஹிம்

த/பெ - திரு.முகைதீன் பிச்சை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். உங்களுக்கு பாஸ்போர்ட் உள்ளதா என்றால் உள்ளது. எந்த வருடம் முதன் முதலில் பாஸ்போர்ட் பெற்றேன் என்றால் 1980 ம் ஆண்டில் பெற்றேன். 1980 ம் ஆண்டிலிருந்து எந்தெந்த நாடுகளுக்கு சென்றிருந்தீர்கள் என்றால் சவுதி அரேபியா, கத்தார் ஆகிய நாடுகளுக்கு வேலைக்காக சென்றுள்ளேன். சுமார் 30 வருடங்களாக நான் வெளி நாட்டில் வேலை செய்து வந்தேன் என்றால் சரி தான். உங்கள் பாஸ்போர்ட்டை பார்த்தால் எந்த வருடம் நீங்கள் வெளி நாட்டில் வேலை பார்த்தீர்கள் தொடர்பான வருடங்கள் மற்றும் நாடுகள் விவரங்கள் தெரிய வரும் என்றால் சரி தான்.

2) உங்களுக்கு எந்த ஊரில் திருமணம் நடைபெற்றது என்றால் ஏர்வாடி ஆகும். ஏர்வாடி தான் எனது சொந்த ஊர் ஆகும். எனக்கு 6 குழந்தைகள். எனக்கு 2 மனைவிகள் முதல் மனைவி மூலம் 2 ஆண், 2 பெண். 2 வது மனைவி மூலம் 1 ஆண், 1 பெண் ஆகும். நான் தற்போது 2 வது மனைவியுடன் தான் வசித்து வருகிறேன். எனது குழந்தைகளில் 2 பேருக்கு திருமணம் ஆகி உள்ளது. மீதமுள்ள 4 குழந்தைகளுக்கு

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2024.11.14 17:09:45 +0600

திருமணம் ஆகவில்லை. தற்போது என்ன வேலை செய்து வருகிறீர்கள் என்றால் நான் எந்த வேலையும் செய்யவில்லை,எனது மாத வருமானத்திற்கு என்ன செய்கிறேன் என்றால் எனது மகன் ஏதாவது தருவார்.

3) என் மகன் தற்போது என்னை போன்று வெளி நாட்டில் வேலை செய்து வருகிறார். அவர் சூப்பர்வைசர் ஆக வேலை செய்து வருகிறார். ஏர்வாடியில் மொத்தம் எத்தனை நபர்கள் ஜமாத்தில் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஜமாத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால் என்னென்ன தகுதிகள் வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. ஜமாத்தில் நீங்கள் உறுப்பினராக இருப்பதற்கு உங்களிடம் அடையாள அட்டை எதுவும் இல்லை என்றால் சரி தான்.

4) இந்த வழக்கில் உள்ள வாதி உதுமான் கனிக்கு அவரது வீட்டில் செல்லப் பெயராக என்ன பெயர் சொல்லி கூப்பிடுவார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான். மனைவி, பிள்ளைகள் எந்த பெயரில் கூப்பிடுவார்கள் என்று தெரியாது என்றால் சரி தான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி உதுமான் கனி தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அது போல் மனைவியும் உதுமான் கனி மீது வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது என்றால் சரி தான். இவ்வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.14 17:10:00 +0600

5) விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று வாதி கூறினார் என்று சாட்சி கூறுகிறார். உதுமான் கனியின் மனைவியின் முழு பெயர் என்ன என்றும் அவரை வீட்டில் என்ன பெயர் சொல்லி அழைப்பார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் அவரது பெயர் சைய்யது ஷிபானா ஆகும். மேற்படி பெயரையும் உதுமான் கனி சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரி தான். சைய்யது ஷிபானா குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள டி.வி.சி மனுவில் 1ம் எதிர் மனுதாரரான முகமது ஆசிப் என்ற உதுமான் கனி, த/பெ.அபுபக்கர், லெட்சுமி நரசிங்கபுரம், ஏர்வாடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் வீட்டில் எப்படி கூப்பிடுவார்கள் என்றும் என்ன பெயர் சொல்லி அழைப்பார்கள் என்றும் எனக்கு தெரியாது என சாட்சி கூறுகிறார்.

6) உதுமான் கனி உங்களுக்கு உறவினர் கிடையாது என்றால் சரி தான். உதுமான் கனி உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 3 பேர் ஆவார்கள். உதுமானியின் சகோதரிகள் எந்த ஊரில் எந்த நபர்களுக்கு திருமணம் செய்யப்பட்டு உள்ளார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான். உதுமான் கனியின் தகப்பனார் என்ன வேலை செய்தார் என்ன வருமானம் ஈட்டினார், எவ்வாறு ஈட்டினார் என்றால் அவர் விவசாயம் செய்து வந்தார். எந்தெந்த ஊரில் அவருக்கு விவசாய நிலங்கள் உள்ளது, எவ்வாறு விவசாயம் செய்து வருகிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2024.11.14 17:10:06 +0600

7) உதுமான் கனியின் தாயார் என்ன வேலை செய்து வருகிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான். சையது ஷிபானா என்பவரை உதுமான் கனி சொல்லித் தான் சையது ஷிபானா என்ற மனைவி உள்ள விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி உடன் பிறந்தவர்கள் மற்றும் குடும்பத்தினரை பொறுத்,து உங்களுக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரி தான். அது போல் சையது ஷிபானாவின் முதல் குழந்தை என்ன எந்த மருத்துவமனையில் பிறந்தது அதன் பெயர் என்ன என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான்.

8) சையது ஷிபானாவுக்கும், உதுமான் கனிக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும் எங்கு வைத்து நடைபெற்றது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரி தான். இந்த வழக்கில் உதுமான் கனி அழைத்ததன் பேரில் தான் நீங்கள் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரி தான். நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உதுமான் கனி தயார் செய்த ஆவணத்தில் தான் நீங்கள் கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்றால் சரி தான். அந்த நிரூபண வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரி தான். ஊரில் நடந்ததாக ஜமாத்தில் சொன்னதின் அடிப்படையில் தான் நீங்கள் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.14 17:10:13 +0600

9) உங்களிடம் மேற்படி விவரத்தை கூறிய ஜமாத் தலைவரின் பெயரை தற்போது உங்களால் சொல்ல முடியாது என்றால் சரி தான். ஜமாத்துக்கு தலைவர் உண்டா என்றால் லெப்பை மகன் ஷேக் என்பவர் ஆவார். அவர் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை தலைவராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. தற்போது ஷேக் என்பவர் உயிருடன் உள்ளார். தலைவராகத் தான் உள்ளார். ஷேக் என்பவர் எந்த இடத்தில் வைத்து உங்களிடம் இந்த விவரத்தை சொன்னார் என்றால் ஏர்வாடி மெயின் ரோட்டில் உள்ள ஜமாத்தில் கூட்டம் போட்டு பேசுவார்கள்.

10) அந்த கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். அக் கூட்டத்தில் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதியை ஷேக் என்பவர் என்னிடம் கூறினார். காலையில் நடந்ததா இரவு நடந்ததா எந்த தேதியில் நடந்தது என்றால் தேதியை என்னால் சொல்ல முடியாது. ஆனால் இரவில் தான் நடந்தது. ஜமாத்தில் கூட்டம் முடிந்த பின்பு கூட்டத்தில் நடைபெற்ற விவரத்தை தீர்மானமாக பதிவேட்டில் பதிவிடுவார்கள் என்றால் சின்ன சின்ன விசயத்தை பதிய மாட்டார்கள். முக்கியமான விசயங்கள் ஏதாவது இருந்தால் பதிவிடுவார்கள்.

11) வழக்கு சங்கதிகள் நீங்கள் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நான் பங்கேற்றுக் கொண்டதாக சொல்லும் மீட்டிங்கில் ஜமாத்தில் பதிவு

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.14 17:10:20 +0600

செய்யப்பட்டு கையொப்பம் வாங்கினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜமாத்தில் சொன்ன விசயத்தை தவிர எனக்கு நேரடியாக வழக்கு விவரங்கள் தெரியாது என்றால் சரி தான். சையது ஷிபானா உங்கள் வீட்டுக்கு வரும் போது தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரி தான். நான் அவரை அதற்கு முன்பு பார்த்ததில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் சையது ஷிபானாவை நீங்கள் நேரில் சந்தித்தீர்கள் என்றால் 2024 ம் ஆண்டு தான் சந்தித்தோம்.

12) உதுமான் கனி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் விவசாயம் செய்து வருகிறார். உதுமான் கனிக்கு நிறைய சொத்துக்கள் உள்ளதா என்றால் குடும்பத்தை கவனிக்கும் அளவுக்கு சொத்து உள்ளது. நீங்கள் வேலை இல்லாமல் வீட்டில் சும்மா இருப்பதால் உதுமான் கனி உங்களுக்கு பணம் தருவார் என்ற நோக்கத்தில் அதற்கு ஆசைப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளது போல் ஜமாத்தில் நீங்கள் கேள்விப்படவும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் ஜமாத்தில் உறுப்பினர் இல்லை என்றால் நான் உறுப்பினர் என்று கூறவில்லை.

13) நீங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஜமாத்தில் உறுப்பினர் என்று குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரி தான். நீங்கள் ஜமாத்தில் உறுப்பினராக இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.14 17:10:28 +0600

சரியல்ல. 1ம் பிரதிவாதியும் அவரது குழந்தைகளும் நாளது தேதி வரை வாதியை நினைத்து தான் வாழ்ந்து வருகின்றனர் என்றால் சரியல்ல. வாதி தான் 1ம் பிரதிவாதி மற்றும் குழந்தைகளின் அன்பு, காதல் ஆகியவற்றை புரிந்து கொள்ளாமல் உங்கள் மூலம் தவறான சங்கதிகளை சொல்லி அவதூறுகளை பரப்பி நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து பெற்று விடலாம் என்று வாதி தூண்டி உள்ளார் என்றால் சரியல்ல. உங்களது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக் கூடிய சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.14 17:10:34 +0600